**கோயம்புத்தூர் வணிக வழக்குகள் நீதிமன்றம் (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர்**

**COS.No. 33 of 2025**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13ம் நாள் வெள்ளிக்கிழமை 1969ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் திரு.கி.ஹரிகரன், எம்.எல்., நீதிபதி, வணிக வழக்குகள் நீதிமன்றம், (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | PW1– Mr.Anish Mathew Thomas | கிராமம்: | |
| த.பெ. | Mr.C.K.Thomas | வேலை: | |
| வயது | 52 | செல்போன் எண்: | |

**முதல் விசாரணை:**

**என் பெயர் அனிஷ் மேத்தீவ் தாமஸ், வயது 52, த/பெ. C.K.தாமஸ். நான் தாக்கல் செய்துள்ள ஆணையுறுதி பத்திரத்தில் உள்ள வாசகங்கள் உண்மை என்றும், சரி என்றும் உறுதியளிக்கிறேன். அதை என் தரப்பு முதல் விசாரணையாக தாக்கல் செய்கிறேன். மேலும், என் தரப்பில் பின்வரும் ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்ய வேண்டுகிறேன்.**

**1) WhatsApp message extracts between the Plaintiff and 6th Defendant from 16.01.2021 to 19.04.2022 – Print out**

**2) Email Conversations between the Plaintiff and 6th Defendant – Print out**

**3) WhatsApp message extracts between the plaintiff and Mr.Balasubramaniam from 08.07.2022 to 18.07.2022 – Print out**

**4) Email conversations between the Plaintiff and Mr.Balasubramaniam – Print out**

**5) Email conversations between the Plaintiff and 7th Defendant – Print out**

**6) Statement of Account of the Plaintiff – Print out**

**7) Statement of Account of the Plaintiff's wife Mrs.Smitha Mathew – Print out**

**8) Legal notice issued by the Plaintiff to the Defendants – Office Copy**

**9) Postal acknowledgment card served on the Defendants – Xerox**

**The witness has prayed for to mark the above listed documents. Since the Doc.No.9 is the photocopy, List of Doc.No.1 to 8 are accepted and marked as Ex.A.1 to Ex.A.8 subject to the objections stated by the defendant in the admission and denial of documents statement.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

**இந்த வழக்கை பிரதிவாதி நிறுவனத்தில் இருந்து எனக்கு சேரவேண்டிய பாக்கித் தொகைகளுக்காக தாக்கல் செய்திருக்கிறேன்.**

**உங்களுடைய அறிவுறுத்தலின்படி தான் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.**

**பிரதிவாதி நிறுவனத்திற்கு consultant–ஆக வருவதற்கு முன்னால் நீங்கள் பல நிறுவனங்களில் பணியாற்றியதாக குறிப்பிட்டுள்ளீர்கள், என்ன நிலையில் மற்ற நிறுவனங்களில் நீங்கள் பணியாற்றி வந்தீர்கள் என்றால் MRF டயர் நிறுவனத்தில் இரண்டு ஆண்டுகள் Marketting பிரிவில் அகில இந்திய பொறுப்பில் இருந்தேன்.**

**MRF நிறுவன பணிகளுக்கு முன்பாக நீங்கள் JSW Steels நிறுவனத்தில் பணியாற்றி வந்தீர்கள் என்றால் சரிதான்.**

MRF நிறுவனம் மற்றும் JSW Steels நிறுவனம் உள்ளிட்ட நிறுவனங்களிலிருந்து உங்களுக்கான appointment order வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

அந்த நியமன உத்தரவில் உங்களுக்கான மாத ஊதியம் குறித்து எழுதப்பட்டிருக்கும் என்றால் சரிதான்.

2014 முதல் 2018 ஆம் ஆண்டு வரை JSW Steels நிறுவனத்தின் தொழிலை மேம்படுத்துவதற்காக உங்களுடைய பங்களிப்பு இருந்தது என்று குறிப்பிட்டுள்ளீர்கள், அவ்வாறு மேம்பட்டதற்கான ஆதாரங்கள், ஆவணங்கள் எதையும் இவ்வழக்கில் சமர்ப்பித்துள்ளீர்களா என்றால் இல்லை.

பிரதிவாதி நிறுவனத்திற்கு நீங்கள் consultant நிலையில் பணியாற்றதான் வந்தீர்கள் என்று சொன்னால் என்னை அவர்கள் தான் consultant–ஆக இருப்பதற்காக அழைத்தார்கள்

Consultant–ஆக நீங்கள் நியமிக்கப்படுவதற்கு appointment order அல்லது நியமன ஆணை வாங்கி இருந்தீர்களா என்றால் நான் கேட்டேன், அவர்கள் தரவில்லை.

நீங்கள் பிரதிவாதி நிறுவனத்தில் பணியில் சேர்ந்த பிறகு உங்களுக்கு ஒவ்வொரு மாதமும் ரூபாய் 3.75 லட்சம் கொடுத்து வந்தார்கள் என்று சொன்னால் சரிதான், ஆனால் அது ஒரு பகுதி தொகை தான்.

செப்டம்பர் 2019 ஆம் ஆண்டு முதல் நீங்கள் consultant–ஆக பிரதிவாதி நிறுவனத்தில் பணியில் இருந்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரிதான்.

நீங்கள் பிரதிவாதி நிறுவனத்தில் இணைந்து பணியாற்றி வந்த சமயங்களில் ரூபாய் 3.75 லட்சம் பெற்று வந்த காலத்தில் உங்களுக்கு சேர வேண்டிய கூடுதலான தொகை இன்னும் வர வேண்டியுள்ளது என்று பிரதிவாதி நிறுவன நிர்வாகத்திடம் நீங்கள் கேட்டு ஒரு e–mail அல்லது கடிதம் கொடுத்துள்ளீர்களா என்று சொன்னால் நேரடியாக கேட்டேன், e–mail கொடுக்கவில்லை.

அக்டோபர் மாதம் 2021 ஆம் ஆண்டு வரைதான் பிரதிவாதி நிறுவனத்தில் நான் பணியாற்றி வந்தேன், அதன் பின்னிட்டு பிரதிவாதி நிறுவனத்தில் நான் பணியாற்றுவது நின்றுவிட்டது என்று சொன்னால் சரிதான்.

ஒரு ஒரு தொழிலை விரிவுபடுத்த வேண்டும் என்றால் அந்த தொழில் எவ்வாறு நடத்துவது என்பது உங்களுக்கு தெரிந்திருந்தால் தான் அவ்வாறு நீங்கள் செய்ய முடியும் என்று சொன்னால் சரிதான்.

Consultant–ஆக நீங்கள் பிரதிவாதி நிறுவனத்தில் இருந்ததாக கூறுகிறீர்கள், அவ்வாறு இருக்கும் போது பிரதிவாதி நிறுவனம் யார் யாரிடம் எல்லாம் தொழில் செய்து வந்தார்கள், அவர்களிடம் எவ்வாறு தொழில்களை மேம்படுத்துவது உள்ளிட்ட விபரங்களை நீங்கள் கூறி வந்தீர்களா என்றால் சரிதான்.

பிரதிவாதி நிறுவன பணியில் இருந்து கடந்த அக்டோபர் 2021 ஆம் ஆண்டு நீங்கள் நின்ற பிறகு உங்கள் கைவசம் வைத்திருந்த பிரதிவாதி நிறுவன ஆவணங்களை பிரதிவாதி நிறுவனத்தில் திருப்பிக் கொடுத்ததாக பிரதிவாதி நிறுவன நிர்வாகத்திடமிருந்து எழுத்துப்பூர்வமாக ஒப்புதல் பெற்றுள்ளீர்களா என்று சொன்னால் இல்லை, அவர்கள் கேட்கவும் இல்லை, நான் கொடுக்கவும் இல்லை.

மற்ற நிறுவனங்களுக்கு அதன் பின்னர் நீங்கள் consultant–ஆக பணியாற்றி வந்தீர்களா என்றால் மூன்று அல்லது நான்கு மாதம் கழித்து நான் மற்ற நிறுவனங்களில் பணியாற்ற துவங்கினேன்.

பிரதிவாதி நிறுவனத்திற்கு உங்களுக்கு பணம் தர வேண்டியுள்ளது என்று எப்போது e–mail அனுப்பினீர்கள் என்று சொன்னால் 24.01.2024 தேதியில் e–mail அனுப்பினேன், அதற்கு முன்பாக whatsapp மூலமாக நான் கேட்டுவந்தேன்.

பிரதிவாதி நிறுவனத்திற்கு தொழில் போட்டியாளராக உள்ள மற்ற நிறுவனத்தில் நீங்கள் சேர்ந்து பணியாற்றி வந்து அதனால் உங்கள் மீது பிரதிவாதி நடவடிக்கை எடுப்பேன் என்று கூறியதால் அவர் மீது இவ்வாறு பொய்யாக ஒரு குற்றச்சாட்டு தெரிவித்து வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதி நிறுவன திரு.பாலசுப்ரமணியம் என்பவரிடம் நீங்கள் whatsapp chat செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான்.

நீங்கள் consultant–ஆக பணியாற்றிய வரை திரு.பாலசுப்பிரமணியம் பிரதிவாதி நிறுவனத்தில் பணியாற்றவில்லை என்று சொன்னால் சரிதான்.

Ex.A.1 ஆவணம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது, சாட்சி அந்த ஆவணத்தைப் பார்த்தார், அந்த ஆவணத்தை சாட்சியிடம் காட்டி நீங்கள் எந்த தேதியில் பிரதிவாதி நிறுவனத்திடம் இருந்து பணம் கேட்டு whatsapp குறுஞ்செய்தி அனுப்பியுள்ளீர்கள் என சாட்சியிடம் கேட்கப்பட்டது, 13.12.2021 என்று சாட்சி தெரிவித்தார்.

அந்த தேதியில் 1.75 லட்சம் என்று தொகை குறிப்பிட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான்.

அதன் பின்னிட்டு உங்களிடம் சுமார் 2 லட்சம் ரூபாய் பிரதிவாதி நிறுவனம் உங்களுக்கு வழங்கியது என்று சொன்னால் சரிதான்.

ஒரு நிறுவனத்தில் நீங்கள் பணியாற்றி வரும் சமயத்தில் மாத ஊதியத்துடன் போனஸ் ஆகவும் பணம் கிடைக்கும் என்று சொன்னால் சரிதான்.

consultant–ஆக இருப்பவருக்கு பொதுவாக ஒரு நிறுவனம் போனஸ் கொடுக்க மாட்டார்கள், நீங்கள் பொய்யாக போனஸ் பிரதிவாதி நிறுவனம் உங்களுக்கு தருவதாக ஒப்புக்கொண்டதாக சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல, நான் consultant–ஆக பணியாற்றி வரும் நிறுவனங்களில் நான் போனஸ் வாங்குவதை வாடிக்கையாக வைத்துள்ளேன்.

மற்ற நிறுவனங்களில் நீங்கள் consultant–ஆக இருந்து போனஸ் பெற்று வருவதாக காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

நீங்கள் எத்தனை நிறுவனங்களில் தற்போது consultant–ஆக இருக்கிறீர்கள் என்றால் பல நிறுவனங்களில் consultant–ஆக இருக்கிறேன்.

அவர்கள் என்ன தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள் என்றால் பல தொழில்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

Steel Industries நிறுவனங்களுக்கு நீங்கள் consultant–ஆக இருக்கிறீர்களா என்றால் இருக்கிறேன்.

நீங்கள் பிரதிவாதி நிறுவனத்தின் போட்டி நிறுவனங்களில் பணியாற்றி பிரதிவாதி நிறுவன தொழில் விபரங்களை அவர்களுக்கு பகிர்ந்ததால் பிரதிவாதி நிறுவனம் உங்கள் மீது நடவடிக்கை எடுப்பேன்

என்று கூறி வந்ததால் நீங்கள் இந்த பொய்யான வழக்கை பிரதிவாதி நிறுவனம் மீது தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

உங்களுக்கு நீங்கள் வேண்டுமென்று கேட்ட 1.75 லட்சம் ரூபாய் தொகையில் பிரதிவாதி நிறுவனம் உங்களுக்கு இரண்டு லட்சம் ரூபாய் தொகை அனுப்பி இருந்தது, அந்த தொகையை உங்களுடைய மனைவியின் வங்கிக் கணக்கிற்கு செலுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் நான் கேட்ட மொத்த தொகையில் சுமார் 2 லட்சம் மட்டும் தான் எனக்கு பிரதிவாதி நிறுவனத்தால் கொடுக்கப்பட்டுள்ளது.

பிரதிவாதி நிறுவனம் உங்களுக்கு இவ்வளவு தொகை தருவோம் என்று உங்களுடைய நியமன ஆணையில் எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை, அவ்வாறு இருக்கும் போது நீங்கள் கேட்கும் தொகை ஏற்புடையதல்ல, பிரதிவாதி நிறுவனம் உங்கள் மீது நடவடிக்கை எடுப்பதாக கூறி வந்ததால் மட்டுமே இவ்வழக்கை நீங்கள் பொய்யாக தாக்கல் செய்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதி நிறுவன தொழிலில் நீங்கள் consultant–ஆக பணியாற்றி வந்த காலத்தில் பிரதிவாதி நிறுவன விற்பனையில் ஏதேனும் முன்னேற்றம் ஏற்பட்டது என்பதை காட்டும் விதமாக இவ்வழக்கில் ஆவணங்கள் எதையும் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் பிரதிவாதி நிறுவனம் பல சமயங்களில் எனக்கு என்னுடைய பணியினை பாராட்டி பல பலமுறை whatsapp–ல் கொடுத்துள்ளது, அது தவிர நேரிலும் எனது பணியினை பிரதிவாதி நிறுவனம் பாராட்டியுள்ளது.

பிரதிவாதி நிறுவனத்தில் அதிக ton கணக்கில் உங்களுடைய பணி காரணமாக வியாபார முன்னேற்றம் ஏற்பட்டது என்பதை காட்டும் விதமாக ஆவணங்கள் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை.

24.01.2022 தேதியில் பிரதிவாதி நிறுவனத்திற்கு நீங்கள் ஒரு e–mail கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான், அந்த e–mail ஆவணம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது, அந்த e–mail ஆவணத்தை சாட்சி பார்த்தார்.

24.01.2022 தேதியில் உங்களுக்கு பிரதிவாதி நிறுவனத்தால் வழங்கப்பட்ட e–mail–ல் நீங்கள் பணியில் சேர்ந்த பிறகு உங்களுக்கான ஊதியத்தை நிர்ணயம் செய்து கொள்ளலாம் என்று Excel sheet கணக்கில் குறிப்பிட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான், எங்கள் இருவராலும் அவ்வாறு ஒப்புக்கொள்ளப்பட்டது.

e–mail உங்களால் தான் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

பிரதிவாதி நிறுவனத்தில் நீங்கள் பணியில் சேர்ந்த பிறகு இந்த தொகை தான் உங்களுக்கு சம்பளமாக வழங்குவதாக பிரதிவாதி நிறுவனம் ஒப்புக்கொண்டு உங்களுக்கு e–mail ஏதேனும் கொடுத்துள்ளதா என்றால் இல்லை.

பிரதிவாதி நிறுவனம் அவர்கள் கோரியுள்ளபடி நஷ்டஈடு அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் தவறு.

எழுத்துப்பூர்வமாக பிரதிவாதி நிறுவனம் உங்களது சம்பளத்தை நிர்ணயிக்காத சமயத்தில் கற்பனையாக இவ்வழக்கை நீங்கள் தாக்கல்

செய்துள்ளது ஏற்புடையதல்ல, நீங்கள் இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரம் உங்களுக்குக் கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை நிறைவுற்றது.

**Sd/-K.Hariharan**
**Judge,**
**Commercial Court**
**(District Judge Cadre),**
**Coimbatore.**